24th July 1964]

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: சேலம் நகரசபையிலிருந்து அவ்விதம் தீர்மானம் ஒன்றும் வரவில்லை என்று நினைக்கிறேன். எனக்கு அங்கு வரவேற்பு அளித்தபோது இதைப்பற்றி கூறினார்கள் என்று நினைக்கிறேன்.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்: தலைவர் அவர்களே, தியேட்டர்-கம்-பப்ளிக் ஹால் கட்ட வேண்டும் என்று மதுரை நகரசபையிலிருந்து விண்ணப்பித்தால் அனுமதி வழங்கப்படுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: விண்ணப்பித்தால் பரிசீலிக்கலாம்.

திரு. எம். தண்டாயுதபாணி: பஞ்சாயத்து கூட்ட மன்றங்களில் பொது நிதி வேண்டிய அளவுக்கு இருப்பதால், சினிமா தியேட்டர்களை எடுத்து நடத்துவதற்கு அனுமதி கோரினால், அனுமதி கொடுக்கப்படுமா?

MR. SPEAKER: These are all hypothetical questions. No answer need be given.

திரு. டி. கார்ச்சா கவுடர்: ஸார், இப்போது தியேட்டர்களுக்கு விதிக்கப்படுகின்ற என்டர்டைன்மென்ட் டாக்ஸில் எத்தனை சதமானம் நகர சபைக்கு கொடுக்கப்படுகிறது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: தனிக்கேள்வி வேண்டும்.

திரு. முனு. ஆதி: தலைவர் அவர்களே, நகராட்சி மன்றங்களில் சினிமாக் கொட்டகைகளுக்கு லைசென்ஸ் கொடுக்கும் உரிமையை அதாவது கலக்டர் சிபாரிசு செய்வது என்கின்ற முறையை விட்டு, விட்டு, நகராட்சி மன்றங்களே லைசென்ஸ் கொடுப்பது என்கின்ற உரிமையை கொடுக்க சர்க்கார் முன் வருமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இதற்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தமில்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

கல்விச் சலுகைக்கு விண்ணப்ப பாரங்கள்

***685 கேள்வி—திரு. எம். எஸ். செல்வராஜன்:** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இலங்கையிலிருந்து தமிழ்நாடு திரும்பியோருக்கு கல்விச் சலுகைகள் பெறுவதற்குரிய விண்ணப்ப பாரங்கள் காலாகாலத்தில் கிடைப்பதில்லை என்பது உண்மையா?

(இ) பாரங்கள் காலாகாலத்தில் கிடைப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது?

THE HON. SRI V. RAMAIAH: In order to overcome the difficultics experienced by the children of Ceylon repatriates in obtaining the requisite application forms in time for applying for boarding grants, the Collectors have been instructed to have sufficient number of forms printed locally to meet their requirements.

[24th July 1964

SRI M. S. SELVARAJAN : Sir, in addition to the Collectors keeping the forms, will the Government consider the desirability of allowing the Educational Authorities to keep the forms?

THE HON. SRI V. RAMAIAH : It will be appropriate if the Collectors only keep the forms available, because they are in charge of disposing of the application forms for boarding grants.

சேலம் இரும்புக்கனி

* 686 கேள்வி.—திரு. ப. உ. சண்முகம் :
திரு. மீ. கலியாணசுந்தரம் : } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் இரும்பு சம்பந்தமான M/S. M.N. தஸ்தூர் கம்பெனி (கல்கத்தா) அறிக்கை வந்துவிட்டதா ?

(இ) அதன்மீது சர்க்கார் எடுத்துள்ள முடிவு யாது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :

(அ) இல்லை.

(இ) இந்த வினவுக்கு இடமில்லை.

திரு ப. உ. சண்முகம் : தஸ்தூர் கம்பெனி அறிக்கை இதுவரையிலும் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே நேரத்தில் சேலம் இரும்புத் திட்டத்தை கைவிடப்போவதாக பத்திரிகைகளில் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. சேலம் இரும்பையும், நெய்வேலி நிலக்கரியையும் உபயோகித்து இரும்பு உருக்காலை ஏற்படுத்தப்படும் என்று சொன்ன உறுதிமொழி எந்த நிலைமையில் இருக்கிறது ? எப்படி விரைவில் ஏற்படுத்தப் போகிறார்கள் ? மூன்றாவது திட்ட காலத்திற்குள் இதற்கான வேலை துவக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நிர்வாகத்திற்குத்தான் சர்க்கார் பொறுப்பு. பத்திரிகைகளில் வந்துகொண்டிருக்கின்ற செய்திகளுக்கு எல்லாம் சர்க்கார் பதில் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. பத்திரிகைகளில் ஏதாவது வருகிறது என்றால், அது எப்படி வந்தது, அல்லது அது தவறு, அல்லது உண்மை என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. இந்தச் சர்க்காரைப் பொறுத்தளவில், தஸ்தூர் ரிப்போர்ட் ஒரு வாரம் அல்லது இரண்டு வாரத்திற்குள் வந்து விடும் என்று தகவல் கிடைத்திருக்கிறது. அந்த ரிப்போர்ட் வந்தபிறகு மத்திய சர்க்கார் அதைப்பற்றி பரிசீலனை செய்வார்கள். எந்த முறையில் சேலம் இரும்பை உபயோகப்படுத்தலாம் என்பதைப்பற்றிய பரிசீலனை முடிவு செய்யப்படும். சாதாரணமாக கன்வென்ஷனல் ப்ளாஸ்ட் ஃபர்னஸ் முறைப்படி உபயோகிக்க முடியுமா என்பதைப்பற்றியும், அதற்கான ஆலோசனைகளைப் பற்றியும் சொல்வார்கள் என்று நினைக்கிறேன்.